**IN THE COURT OF IV ADDITIONAL CITY CIVIL COURT,**

**CHENNAI-600 104.**

**S.C.No.86 of 2023**

**Deposition of witness for PW-2**

பெயர் : தேவி தேதி: **25.07.2025**

கணவர் பெயர் : சுரேஷ்

வயது : 29

முகவரி : நெ.359, திரு.வி.கா.நகர் குடியிருப்பு, சென்னை –11

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of July 2025 .

---

**25.07.2025**

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

2ம் எதிரி ஸ்ரீதர் ஆஜர்

4ம் எதிரி கார்த்திக் ஆஜர். (4ம் எதிரியை தனியாக பிரிக்கபட்டுள்ளது. (SC/465/2012)

1ம் எதிரி சங்கர், 5ம் எதிரி ஸ்ரீதர், 6ம் எதிரி ராஜா ஆகியோர் இறந்து விட்டனர்.

3ம் எதிரி ஜெகன், ஆஜர் இல்லை, அவரது தரப்பில் 355 பி.என்.எஸ்.எஸ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**PW2– முதல் விசாரணை**

நான் நெ.359, திரு.வி.கா.நகர் குடியிருப்பு, சென்னை 11. நான் குடும்ப தலைவி ஆவேன். என் கணவர் சுரேஷ் வெளி நாட்டில் வேலை செய்கிறார். அ.சா.1 லதாவை தெரியும். அவர் என் வீட்டில் வாடகைக்கு குடி இருக்கிறார். அ.சா.2 சதீஷ் லதாவின் மகன். சாட்சி குமார் என்னுடைய அண்ணன். சாட்சி வசந்தா என்னுடைய அம்மா. அவர் தற்போது உயிருடன் இல்லை. லதாவின் கணவர் விஜயகுமார் எங்கள் வீட்டில் வாடகைக்கு குடி இருந்தார். அவர்

தற்போது உயிருடன் இல்லை. அவர் எப்படி இறந்தார் என்றால் அவரை வெட்டி கொன்று விட்டதாக என் அம்மா சொல்லி எனக்கு தெரியும். எங்கள் வீட்டில் விஜயகுமார் மாடியில் வாடகைக்கு குடியிருந்த போது அவரை வெட்டி கொன்று விட்டதாக தெரியும். அவர் வீட்டிலேயே தான் இருப்பார். அவர் வேலைக்கு செல்வதில்லை. 2010–2011 ஆண்டு ஒரு நாள் மதியம் 4, 5 பேர் எங்கள் வீட்டின் மாடிக்கு வந்து விஜயகுமாரையும், அவரது மகனையும் வெட்டி விட்டு சென்று விட்டதாக என் அம்மா சொல்லி எனக்கு தெரியும். சதீஷ்க்கு மூக்கில் காயம் ஏற்பட்டது. விஜயகுமார் இறந்து விட்டார். யார் வெட்டினார்கள் என்று தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். சம்பவம் நடக்கும் போது நான் அங்கு இல்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதகோரி அரசு தரப்பில் பகுதியாக அனுமதிகேட்டு அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 19.01.2010 அன்று மதியம் 1.15 மணியளவில் என் வீட்டின் மாடி மீது ஒரே கூச்சலாக இருந்தது. அப்போது என் அம்மா பார்த்தார்கள் என்றும், லதாவும், என் அம்மா மேலே போக முற்பட்ட போது 5 நபர்கள் கத்தியுடனும், ரத்த கறை படிந்த உடைகள் உடனும் கீழே இறங்கி ஓடினார்கள் என்றும், நானும், எனது அண்ணனும் வீட்டிற்கு வெளியே வந்து மாடி போர்சனில் பார்த்த போது சதீஷ்க்கு மூக்கு அறுபட்டு ரத்தகறையுடன் இருந்தார் என்றும், நானும், என் வீட்டில் உள்ளவர்கள் மேலே சென்று பார்த்த போது விஜயகுமார் ரத்த வெள்ளத்தில் வெட்டு பட்டு இறந்து கிடந்தார் என்றும், சதீஷ் ரத்த காயங்களுடன் இருந்தார் என்றும், போலிசார் விசாரத்த போது அயனாவரத்தை சேர்ந்த சங்கர், ஜெகன், லுசு கார்த்திக், சின்ன ஸ்ரீதர் மற்றும் ஸ்ரீபெரும்புதூரை சேர்ந்த ஸ்ரீதர் என்பவரும் வந்து விஜயகுமாரை வெட்டி கொலை செய்தார்கள்

என்றும், தன்னையும் வெட்டி காயப்படுத்தினார்கள் என்று சதீஷ் கூறினார் என்றும், இது சம்பந்தமாக யாரோ அவசர போலிஸ்க்கு தகவல் சொன்னதன் பேரில் போலிசார் அங்கு வந்தார்கள் என்றும், போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2, 3 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் போலிசார் விசாரித்த போதும் சொன்னேன்.

**மறுவிசாரணை – இல்லை**

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

R K P TAMILARASI

Digitally signed by R K P TAMILARASI

25.07.2025

IV Addl. Sessions Judge.
IV Additional Court.